//பதிவஞ்சல் மூலமாக//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,
சென்னை–600 006,

ப.மு.எண். 06866 / அ4 / இ3 / 2023 , நாள். 15.02.2023.

===

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - உதவியாளர் நேரடி நியமனம் – (Group–II A Services) (Non - Interview posts) – 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர்களுக்குப் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை (4டி) எண். 18, பள்ளிக் கல்வித் [ப.க. 4(2)] துறை, நாள்..28.10.2013.
2. அரசாணை (4டி) எண். 353, பள்ளிக் கல்வித் [ப.க. 4(2)] துறை, நாள். 17.12.2013.
3. அரசாணை (நிலை) எண். 34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பி) துறை, நாள்.15.04.2015.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3, கடிதம் ந.க.எண்.7208/PSD–RF–1/2016 நாள்.18.01.2017.
5. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.4744/அ4/இ3/2017, நாள்.04.02.2017.
6. ஈரோடு, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கருத்துரு ந.க.எண்.0192/ஆ1/2022 நாள்.இல்லை.01.2023.

===

ஆணை:

2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (Group–II A Services) (Non -Interview posts) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (04)ல் கண்ட செயல்முறைகள் மூலம் பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (5)ன் அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 12–ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை (6) ன் வாயிலாக உரிய கருத்துருக்கள் ஈரோடு, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் பெறப்பட்டுள்ளது.

ஈரோடு. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் கீழ்க்காண் நேரடி நியமனம் உதவியாளர்களுக்கு அவர்களது பெயருக்கெதிரில் கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள நாளில் உதவியாளர் பதவியில் தமிழ்நாடு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன்கீழ் உட்பிரிவு 28-ன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி திரு. / திருமதி. / செல்வி. | பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறைபடுத்தும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வ.பூர்ணிமா, உதவியாளர் | மாவட்டகல்வி அலுவலகம், (தொடக்கக் கல்வி), ஈரோடு மாவட்டம். | 08.02.2017 முற்பகல் |

மேற்படி பணியாளருக்கு உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்ட ஆண்டு / தரஎண் அடிப்படையில் முன்னுரிமை அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் பணிவரன்முறை குறித்து எழும் ஐயப்பாடுகளை உடனடியாக நியமன அலுவலரின் கவனத்திற்கு சம்பந்தப்பட்ட அலுவலர் கொண்டு வர வேண்டும்.

இந்தப் பணிவரன்முறையானது, பார்வை (4)ல் குறிப்பிட்டுள்ள தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.

சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் இந்தச் செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்க வேண்டும். பணியாளர் வேறு அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருப்பின் அவ்வலுவலகத்திற்கு இச்செயல்முறைகளை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: அசல் பணிப்பதிவேடு

ஓம்/- பூ.ஆ.நரேஷ்
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

/உ.ந.உ.ப.அ/

இந்திராணி 17/04/2023
நேர்முக உதவியாளர்

பெறுநர்: சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் வாயிலாக). 17/04/2023

Attested

நகல்: சம்பந்தப்பட்ட அலுவலர் / தலைமையாசிரியர்.

நகல்: முதன்மைக் கல்வி அலுவலர், ஈரோடு.

17/04/2023
மாவட்டக் கல்வி அலுவலர்
(தொடக்கக்கல்வி)
ஈரோடு - 638 001.